


சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"

FLY TOWARDS
DIGITAL INNOVATION
Services / சேவைகள்
✓DIGITAL MARKETING
✓WEB DEVELOPMENT
✓SOFTWARE DEVELOPMENT
9080999823
7695883647
வடக்கு ரத வீதி,சங்கரன்கோவில்

Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 309 | 02.05.2026 | SATURDAY | CHITHIRAI: 19 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 309 | 02.05.2026 | சனிக்கிழமை | சித்திரை : 19 | விலை : ரூ.5/-

## சிலிண்டர் விலை உயர்வு; மக்களின் துயரை

# "எண்ணிப் பார்த்து தீர்வு காணுங்கள்"

சென்னை, மே.2-

நேற்று மாதத்தின் முதல் நாள் என்பதால், சிலிண்டர் விலை நிலவரத்தை எண்ணெய் நிறுவனங்கள் வெளியிட்டுள்ளன. அதன்படி சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை ரூ.993 உயர்ந்து ரூ.3,237 ஆக விற்பனை செய்யப்படுகிறது. வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலை அதிரடியாக உயர்த்தப்பட்டதால் வணிகர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இந்த நிலையில், தமிழக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் சிலிண்டர் விலை உயர்வு தொடர்பாக வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரி



வித்திருப்பதாவது;

மக்களின் துயரை எண்ணிப் பார்த்து தீர்வு காணுங்கள்!

தேர்தலுக்கு முன்பே கணித்ததுபோல், தேர்தல் முடிந்தவுடன் எல்.பி.ஜி. விலையை உயர்த்தியிருக்கிறது மத்திய பா.ஜ.க. அரசு. உலகச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்தபோது, அதன் பலனை மக்களுக்கு அளிக்கவில்லை. இப்போது மேற்காசிய போர் என்ற நெருக்கடியை வைத்து, மக்களின் நலனை எண்ணாமல், விலையை ஏற்றுவது சரியல்ல.

இந்த எல்.பி.ஜி விலை உயர்வு ஏற்படுத்தும் தாக்கங்களை உணர்ந்து, இந்த விலை உயர்வை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும். மக்களின் வாழ்வாதாரத்தைக் காக்க வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'நட்புடன் உங்களோடு' : 'நீட்' தேர்வெழுதும் மாணவர்களுக்கு மனநல ஆலோசனை!

சென்னை: மே.2-

மருத்துவ மாணவர்கள் மனநல ஆலோசனைப் பெற தமிழக அரசு கட்டணமில்லா தொலைபேசி எண்னை அறிவித்துள்ளது.

இது குறித்து அரசு சார்பில் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்: "மருத்துவ பட்டப் படிப்புகளில் சேருவதற்கான தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு வருகின்ற மே 3ம் தேதி (ஞாயிற்றுக் கிழமை) அன்று நடைபெற உள்ளது. மாணவர்களின் மன உறுதி மற்றும் மனநலம் காக்கும் வகையில் தமிழக அரசின் "நட்புடன் உங்களோடு" திட்டம் மூலம் தொலைபேசி வழியாக மனநல ஆலோசனைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.




எனவே,'டெலி கவுன்சிலிங்' (Tele Counselling) தேவைப்படும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் தயங்காமல் "14416" அல்லது "104" ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு மனநல ஆலோசனைகளை தவறாமல் பெற்றுக் கொள்ளலாம். 24 மணி நேரமும் பயிற்சி பெற்ற மனநல ஆலோசகர்கள், மருத்துவர்கள் மூலம் கட்டணமின்றி இச்சேவை வழங்கப்பட்டு வருகிறது" என்று செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வணிக சிலிண்டர் விலை 3 மாதங்களில் 81% உயர்வு ராகுல் காந்தி கண்டனம்

புதுடெல்லி: மே.2-

வணிக சிலிண்டரைத் தொடர்ந்து அடுத்ததாக பெட்ரோல், டீசல் விலையை மத்திய அரசு உயர்த்தும் என காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி எச்சரித்துள்ளார்.

அமெரிக்கா ஈரான் இஸ்ரேல் போர் காரணமாக, இந்தியாவில் வணிகப் பயன்பாட்டுக்கான எரிவாயு சிலிண்டர் விலை ஒரே நாளில் 993 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது. இது குறித்து ராகுல் காந்தி தனது எக்ஸ் பக்கத்தில், "பணவீக்கத்தின் தாக்கம் தேர்தல்களுக்குப் பின்னரே உணரப்படும் என்று நான் முன்பே கூறியிருந்தேன்.

அதன்படி இன்று, வணிகப் பயன்பாட்டுக்கான எரிவாயு சிலிண்டரின் விலை ரூ.993 உயர்த்தப்பட்டுள்ளது. ஒரே நாளில் ஏற்பட்ட மிகப்பெரிய விலை உயர்வு இதுவே. இதுதான் தேர்தலுக்கான விலை.

பிப்ரவரி முதல் இதுவரை ரூ.1,380 அதிகரித்துள்ளது. வெறும் 3 மாதங்களில் 81% என்பது மிகப்பெரிய விலை உயர்வு. தேநீர் கடைகள், தாபாக்கள், உணவகங்கள், பேக்கரிகள், இனிப்பகங்கள் என அனைவரின் சமையலறையின் மீதும் சுமை அதிகரித்துள்ளது.


இதன் தாக்கம் உங்கள் உணவுத் தட்டின் மீதும் (உணவு விலையிலும்) எதிரொலிக்கும். முதலில் சிலிண்டர் விலையை ஏற்றியுள்ளனர். பிறகு பெட்ரோல் டீசல் விலையையும் உயர்த்துவார்கள்" எனத் தெரிவித்துள்ளார்.

## "இந்திய நாகரிகம் அமைதியை ஊக்குவித்து வருகிறது" புத்த பூர்ணிமா விழாவில் அமித் ஷா பெருமிதம்

புதுடெல்லி: மே.2-

லடாக் என்பது ஒரு புவியியல் பகுதி மட்டுமல்ல, இது புத்த கலாச்சாரம் மற்றும் கருணையின் உயிரோட்டமுள்ள ஆய்வுக்கூடம் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்தார்.

லேயில் நடைபெற்ற புத்த பூர்ணிமா கலாச்சார விழாவில் உரையாற்றிய அமித் ஷா, "இந்திய நாகரிகம் நீண்டகாலமாக அமைதியை ஊக்குவித்து வருகிறது. இப்பகுதியில் பல நூற்றாண்டுகளாக அறிவு சார்ந்த கலாச்சார மரபுகளும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.



தலாய் லாமா இங்கு வரும்போது எல்லாம், இந்த நிலம் வெறும் புவியியல் ரீதியானது மட்டுமல்ல, இது பவுத்த கலாச்சாரம் மற்றும் கருணையின் உயிரோட்டமுள்ள ஆய்வுக்கூடம் என கூறுவார். 75 ஆண்டுகளுக்குப் பிறகு புனித பவுத்த தாதுக்கள் மீண்டும் லடாக்கிற்குத் திரும்பியுள்ளதால், இந்த ஆண்டு புத்த பூர்ணிமா தனிச் சிறப்புப் பெற்றுள்ளது.

கடந்த காலங்களில் மலைப்பகுதிகளில் சாலை வசதி மற்றும் இணைப்பு வசதிகள் குறைவாக இருந்ததால், மிகக் குறைந்த மக்களே இந்த புனிதத் தாதுக்களைத் தரிசிக்க முடிந்தது. ஆனால் தற்போதுள்ள வசதிகளால் லடாக், கார்கில் மற்றும் பிற சமூக மக்கள் இதன் மூலம் ஆன்மீக மற்றும் தெய்வீக உத்வேகத்தைப் பெற முடியும்" என தெரிவித்தார்.

# வைகையை ஆக்கிரமித்த மக்கள் கடலில் இறங்கினார் அழகர்!

### "கோவிந்தா" "கோவிந்தா" எதிரொலித்த அந்த முழக்கம் பிரபஞ்சத்தின் எல்லைகளைத் தொட்ட ஒரு மகா ஆன்மீக அதிர்வு!

மதுரை, மே.2

மதுரை சித்திரைத் திருவிழா என்பது உண்மையில் இரண்டு வெவ்வேறு கதைகள் ஒன்றாக இணைந்த ஒரு மகா சங்கமம்!

1. மீனாட்சி பட்டாபிஷேகம் - திருக்கல்யாணம் (சைவம்)

மதுரையை ஆண்ட மலையத்துவஜ பாண்டிய மன்னனின் மகளாகப் பிறந்தவர் மீனாட்சி. அவர் திக்குவிஜயம் செய்து உலகையே வென்றபோது, கைலாயத்தில் சிவபெருமானை (சொக்கநாதர்) சந்திக்கிறார். அவரைக் கண்டவுடன் மீனாட்சியின் மூன்று முலைகளில் ஒன்று மறைந்து, அவர் சிவபெருமானின் பாதியாக மாறுகிறார். இவர்கள் இருவருக்கும் மதுரையில் நடக்கும் திருமணமே மீனாட்சி திருக்கல்யாணம்.

2. கள்ளழகர் வைகையில் இறங்குதல் (வைணவம்)

இந்தக் கதை அழகர் மலைக்குச் செல்கிறது. அங்கு வாழ்ந்த சுதபஸ் என்ற முனிவர், வைகை ஆற்றில் குளிக்கும்போது துர்வாச முனிவரை கவனிக்கத் தவறினார். கோபமடைந்த துர்வாசர், சுதபஸ் முனிவரை "மண்டுகமாக" (தவளையாக) மாறும்படி சாபமிட்டார்.

சாப விமோசனத்திற்காகத் தவம் இருந்த முனிவருக்கு ஆசி வழங்க, அழகர் மலையிலிருந்து கள்ளர் வேடம் பூண்டு மதுரையை நோக்கிப் புறப்பட்டார் அழகர் (விஷ்ணு). அவர் வைகை ஆற்றில் இறங்கி, முனிவருக்குச் சாப விமோசனம் அளிக்கும் நிகழ்வே வைகையில்





அழகர் இறங்கும் திருவிழா.

3. இணைந்த இரண்டு கதைகள்!

முன்பு இந்த இரண்டு விழாக்களும் வெவ்வேறு மாதங்களில் நடந்தன. மன்னர் திருமலை நாயக்கர் காலத்தில் தான், சைவவைணவ ஒற்றுமையை நிலைநாட்ட இவை இரண்டும் ஒரே மாதத்தில் (சித்திரை) இணைக்கப்பட்டன.

புராணக் கதைப்படி: தனது தங்கை மீனாட்சியின் திருமணத்திற்கு அழகர் மலையிலிருந்து கிளம்பி வரும் அழகர், வைகை ஆற்றின் கரைக்கு வரும்போது திருமணம் முடிந்துவிட்டதை அறிந்து, கோபித்துக் கொண்டு ஆற்றில் இறங்கிவிட்டுத் திரும்பிச் செல்வதாக ஒரு சுவாரசியமான கதையும் மக்களிடையே நிலவுகிறது.

மதுரையின் மகா சங்கமமான சித்திரைத் திருவிழாவின் சிகர நிகழ்வு அரங்கேறியது. பல லட்சக்கணக்கான பக்தர்கள் முன்னிலையில், தங்கக் குதிரை வாகனத்தில் கம்பீரமாகப் பவனி வந்த கள்ளழகர், பச்சைப் பட்டு உடுத்தி வைகை ஆற்றில் இறங்கினார்.

பிரபஞ்சத்தை எட்டிய பக்தி முழக்கம்:

அழகர் வைகை ஆற்றில் கால் பதித்த அந்த மங்களகரமான நொடியில், மதுரையின் திசையெங்கும் எழுந்த "கோவிந்தா... கோவிந்தா..." என்ற பக்தி கோஷம், விண்ணைப் பிளந்து பிரபஞ்சத்தில் உள்ள அனைத்துக் கோள்களையும் தொட்டது போன்ற ஒரு மெய்சிலிர்க்க வைக்கும் ஆன்மீக அதிர்வை ஏற்படுத்தியது. இது வெறும் முழக்கமல்ல, மதுரை மக்களின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் ஆன்மத் துடிப்பு.

திருவிழாவின் சிறப்பம்சங்கள்:


பச்சைப்பட்டு தரிசனம்: விவசாயம் செழிக்கவும், மக்கள் சுபிட்சமாக வாழவும் நல்ல சகுனமாகப் பச்சைப்பட்டு உடுத்தி அழகர் காட்சி அளித்தார். மக்கள்தொகை பெருக்கம்: வைகை ஆற்றின் இருபுறமும் எங்குப் பார்த்தாலும் பக்தர்களின் தலைகளே தெரிந்தன; மதுரையே மக்கள் கடலில் மிதந்தது. பாரம்பரியம்: தங்கள் குழந்தைகளுக்குக் கடவுள் வேடமிட்டு, குலசாமியாய் அழகரை வழிபடும் மதுரை மக்களின் அந்தப் பற்று இன்றும் மாறாமல் தொடர்கிறது.

"கோள்கள் அதிர்ந்ததோ? இல்லை மதுரை மக்களின் பக்தி முழக்கத்தால் பிரபஞ்சமே பணிந்ததோ?. அழகர் தரிசனம்... மதுரையின் மகா அதிசயம்!"

# வாக்கு எண்ணிக்கை அலுவலர்களுக்கு பயிற்சி: சென்னையின் 16 தொகுதிகளுக்கு வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்றது

சென்னை: மே.2-

சென்னையில் உள்ள 16 தொகுதி வாக்குகள் எண்ணும் பணியில் ஈடுபட உள்ள அலுவலர்களுக்கான பயிற்சி நேற்று வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்றது.தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில், சென்னை மாவட்டத்தில் 16 தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு இயந்திரங்கள் வாக்கு எண்ணிக்கை மையங்களான ராணி மேரி கல்லூரி, லயோலா கல்லூரி மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்தில் வைக்கப்பட்டு, தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன.மே 4ம் தேதி வாக்கு எண்ணிக்கை பணி நடைபெறுவதை முன்னிட்டு, வாக்கு எண்ணிக்கை பணியில் ஈடுபடவுள்ள தேர்தல் நடத்தும் அலுவலர்கள், நுண் பார்வையாளர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, அவர்




களின் பணிகள் தொடர்பான செயல்முறை பயிற்சி வகுப்பு கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் க.கற்பகம் தலைமையில் நேற்று நுங்கம்பாக்கம் வள்ளுவர் கோட்டத்தில் உள்ள திருவள்ளுவர் அரங்கில் நடைபெற்றது.மேலும் சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட 16 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் தபால் வாக்குகள் தனியாக தலா 4 மேசைகளிலும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் தலா 14 மேசைகளிலும் எண்ணப்படும்.

இதில் ராணி மேரி கல்லூரி வாக்கு எண்ணிக்கை மையத்தில் ஆர்.கே.நகர் தொகுதிக்கு 18 சுற்றுகளாகவும், திரு.வி.க. நகர் 17, ராயபுரம் 14, துறைமுகம் 14, சேப்பாக்கம்திருவல்லிக்கேணி 17 சுற்றுகளாகவும் வாக்குகள் எண்ணப்படும்.

லயோலா கல்லூரி மையத்தில் பெரம்பூர் 22 சுற்றுகளாகவும், கொளத்தூர் 21, வில்லிவாக்கம் 19, எழும்பூர் 15, ஆயிரம் விளக்கு 18, அண்ணாநகர் 20 சுற்றுகளாகவும் வாக்குகள் எண்ணப்படும்.அண்ணா பல்கலைக்கழக மையத்தில் விருகம்பாக்கம் 23, சைதாப்பேட்டை 21, தியாகராயநகர்18, மயிலாப்பூர்20, வேளச்சேரி 23 சுற்றுகளாக வாக்குகள் எண்ணப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கோவை, நீலகிரி உள்ளிட்ட 8 மாவட்டங்களில் 3 நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்பு!

சென்னை:மே.2-

தமிழகத்தில் நீலகிரி, கோவை உள்ளிட்ட 8 மாவட்டங்களில் நாளை கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: ”தெற்கு ஒடிசா முதல் மன்னார் வளைகுடா வரை, தெலங்கானா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழகம் வழியாக சுமார் 1.5 கி.மீ உயரம் வரை, ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் நாளை (மே.2) ஒரு சில இடங்களிலும், நாளை மறுநாள் (மே.3) ஓரிரு இடங்களிலும்,



மே 4ம் தேதி ஒருசில இடங்களிலும், மே.5 முதல் மே.7ம் தேதி வரை ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

நாளை (மே.2) நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், ஈரோடு, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் பலத்த காற்றுடன் கூடிய (மணிக்கு 40 முதல் 50 கி.மீ வேகத்தில்) கனமழை பெய்யக்கூடும்.

நாளை மறுநாள் (மே.3ம் தேதி) நீலகிரி, கோவை மாவட்ட மலைப் பகுதிகள், திருப்பூர் மாவட்ட மலைப் பகுதிகள், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களிலும்,

மே.4ம் தேதி நீலகிரி, கோவை மாவட்ட மலைப் பகுதிகள், ஈரோடு, சேலம், நாமக்கல் மற்றும் திருச்சி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் பலத்த காற்றுடன் கூடிய (மணிக்கு 40 முதல் 50 கி.மீ வேகத்தில்) கனமழை பெய்யக்கூடும்.தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் நாளை (மே.2) முதல் மே.5ம் தேதி வரை அதிகபட்ச வெப்ப நிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை (மே.2) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்ப நிலை 104 டிகிரி, குறைந்தபட்ச வெப்ப நிலை 84 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும். தமிழகத்தில் இன்று காலை 8.30 மணி நிலவரப்படி, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம் நாலுமுக்கு, காக்காச்சியில் தலா 7 செ.மீ மழை, திண்டுக்கல் மாவட்டம் பழனியில் 5 செ.மீ மழை, திருநெல்வேலி மாவட்டம் மாஞ்சோலை, அம்பா சமுத்திரம், நீலகிரி மாவட்டம் வூட் பிரையர் எஸ்டேட், செருமுள்ளி, ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி ஆகிய இடங்களில் தலா 4 செ.மீ மழை பதிவாகியுள்ளது” என்று செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# கேரளாவில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 2 வங்கதேச பெண்கள் கைது

திருவனந்தபுரம்:மே.2-

கேரள மாநிலம் திருவனந்தபுரம் அருகே உள்ள காரியவட்டத்தில் சட்ட விரோதமாக தங்கியிருந்த 2 வங்கதேச பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.கேரள தீவிரவாத எதிர்ப்புப் படையினருக்கு (ஏடிஎஸ்) கிடைத்த ரகசியத் தகவலின் அடிப்படையில், திருவனந்தபுரத்தின் கழக்கூட்டம் காவல் துறையினர் காரியவட்டத்தில் உள்ள ஒரு வாடகை வீட்டில் புதன்கிழமை இரவு சோதனை நடத்தினர். அப்போது சட்டவிரோதமாக தங்கியிருந்த 2 வங்கதேச பெண்கள் கைது செய்யப்பட்டனர்.

கடந்த ஒரு மாதமாக திருவனந்தபுரத்தில் தங்கியிருந்த இந்த 2 பெண்களும், ஒரு பாலியல் கும்பலுக்காக வேலை செய்து வந்ததாக காவல்துறை கூறியுள்ளது. இந்த சோதனையின்போது, அந்த 2 வங்கதேசப் பெண்கள் தவிர, அங்கிருந்த மேலும் 6 பேரை போலீஸார் விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.தனித்தனி வழக்குகள் இந்தக் குழுவினர் இந்த மாத தொடக்கத்தில் தங்களை ‘மருத்துவர்கள்' என்று பொய்யாகக் கூறி அந்த வீட்டை வாடகைக்கு எடுத்துள்ளது காவல்துறையினர் நடத்திய விசாரணையில் தெரியவந்துள்ளது. இதையடுத்து, 2 வங்கதேசப் பெண்கள் மீதும் சட்டவிரோதமாக தங்கியதற்கும், மற்றொன்று பாலியல் நடவடிக்கைகள் தொடர்பாகவும் என தனித்தனி வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக போலீசார் தெரிவித்தனர். சமீபத்தில் திருவனந்தபுரத்தில் உள்ள ஒரு ஸ்பாவில் இருந்தும் 2 வங்கதேசப் பெண்களை காவல் துறை கைது செய்திருந்தது. போலி ஆவணங்கள் மற்றும் அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி மாநிலத்தில் சட்ட விரோதமாகத் தங்கியிருப்பதாகக் கூறப்படும் வங்கதேச நாட்டினருக்கு எதிரான நடவடிக்கைகளை காவல் துறை தீவிரப்படுத்தி உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.




# சென்னை அறிவாலயத்தில் முதல்வர் ஸ்டாலினுடன் திமுக நிர்வாகிகள் சந்திப்பு

சென்னை:மே.2-

முதல்வர் மு.க.ஸ்டாலினை, திமுக வேட்பாளர்கள் சென்னை அறிவாலயத்தில் நேற்று சந்தித்தனர். அப்போது வெற்றி வாய்ப்புகள் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் கேட்டறிந்தார்.தமிழகத்தில் உள்ள 234 சட்டப் பேரவை தொகுதிகளுக்கான தேர்தல் ஒரேகட்டமாக கடந்த ஏப்ரல் 23ம் தேதி நடைபெற்றது. இதன் வாக்கு எண்ணிக்கை தமிழகம் முழுவதும் 62 மையங்களில் மே 4ம் தேதி நடத்தப்படுகிறது.இதற்கிடையே சமீபத்தில் வெளியான தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்புகளில் பெரும்பாலானவை திமுக கூட்டணி வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைக்கும் என்று தெரிவித்துள்ளன. இதனால் திமுக நிர்வாகிகள் உட்பட கட்சியினர் மிகுந்த உற்சாகமாக காணப்படுகின்றனர்.

இந்நிலையில், முதல்வரும் திமுக தலைவருமான மு.க.ஸ்டாலினை சென்னை அறிவாலயத்தில் உள்ள தலைமை அலுவலகத்தில் திமுக வேட்பாளர்கள் நேற்று சந்தித்து பேசினர்.திமுக பொதுச்செயலாளர் துரை முருகன், அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், எ.வ.வேலு, கே.ஆர். பெரியகருப்பன், சு.முத்துசாமி, சி.வீ.மெய்யநாதன், சி.வி.கணேசன், செந்தில் பாலாஜி, திமுக துணை அமைப்புச் செயலாளர் எஸ்.ஆஸ்டின், டி.ஜெ.கோவிந்தராஜன், சபா.ராஜேந்திரன், நாமக்கல் ராணி, காதர்பாட்சா முத்துராமலிங்கம், கே.எஸ்.மூர்த்தி, ரெ.மகேஷ், ஆ.தமிழரசி, எஸ்.ஏ.சத்யா, மு.மணிகண்டன், புதுச்சேரி ஆர்.சிவா ஆகியோர் நேரில் சந்தித்தனர்.

அவர்களிடம் முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார். பெரும்பாலான கருத்துக் கணிப்புகள் திமுகவுக்கு சாதகமாக வெளிவந்துள்ள நிலையில், கட்சியின் வெற்றி வாய்ப்புகள் குறித்து அவர்களிடம் ஸ்டாலின் கேட்டறிந்தார்.மேலும், வாக்கு எண்ணிக்கையின்போது கட்சியினர் விழிப்புடன் செயல்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். இந்நிகழ்வின்போது திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# தனுஷ்கோடியில் கடல் சீற்றம் - பக்தர்கள், சுற்றுலா பயணிகளுக்கு கட்டுப்பாடு!

ராமேசுவரம்:மே.2-

தனுஷ்கோடி கடலோரப் பகுதிகளில் கடல் சீற்றமாகக் காணப்படுவதால் பக்தர்கள், சுற்றுலாப் பயணிகள் கடலில் இறங்கி குளிக்க போலீஸார் தடை விதித்துள்ளனர். ராமேசுவரத்தில் இருந்து சுமார் 18 கிலோ மீட்டர் தொலைவில் தனுஷ்கோடியும், அங்கிருந்து 5 கி.மீ தொலைவில் அரிச்சல் முனை என்ற பகுதியும் உள்ளது. தனுஷ்கோடியைப் பார்ப்பதற்கு சுற்றுலாப்




பயணிகளும், அரிச்சல் முனையில் புனித நீராட பக்தர்களும் இந்தியாவின் பல்வேறுப் பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான வாகனங்களில் தினந்தோறும் வந்து செல்கின்றனர்.

இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களாக தனுஷ்கோடியில் தெற்கு மன்னார் வளைகுடா கடற்பகுதி சீற்றமாகக் காணப்படுவதால் தனுஷ்கோடி அரிச்சல் முனை தேசிய நெடுஞ்சாலையில் கடல் அரிப்பில் இருந்து பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட தடுப்பு வேலி கற்கள் சாலையில் சிதறி கிடக்கின்றன. கடல் சீற்றம் மற்றும் பலத்த காற்றினால் தனுஷ்கோடி, முகுந்த ராயர் சத்திரம், அரிச்சல் முனை ஆகிய பகுதிகளில் பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்கு போலீஸார் தடை விதித்துள்ளனர்

# மே 7ம் தேதி குரூப்2 5வது கட்ட கலந்தாய்வு

சென்னை::மே.2-

டிஎன்பிஎஸ்சி செயலாளர் பானோத் ம்ருகேந்தர் லால் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: ஒருங்கிணைந்த குரூப்2 மற்றும் குரூப்2 ஏ தேர்வில் 5வது கட்ட அசல் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு மே 7ம் தேதி நடைபெற உள்ளது.இதற்கு அழைக்கப்பட் டுள்ள தேர்வர்களின் பதிவெண்கள் அடங்கிய பட்டியல் இணையதளத்தில் வெளியிடப்பட்டு இருக்கிறது. சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வுக்கான




அழைப்பாணையை தேர்வர்கள் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும்.இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட தேர்வர்களுக்கு குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் வாயிலாக மட்டும் தகவல் தெரிவிக்கப்படும்.

குறிப்பிட்ட நாளில் சான்றிதழ் சரிபார்ப்புக்கு வரத் தவறினால் மறுவாய்ப்பு அளிக்கப்பட மாட்டாது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# சிபிஐ மாநில தலைமை அலுவலகத்தில் மே தின கொண்டாட்டம்

சென்னை:மே.2-

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில தலைமை அலுவலகத்தில் இன்று மே தினம் கொண்டாடப்பட்டது.

இது குறித்து, அக்கட்சியின் அலுவலகச் செயலாளர் எம்.ஆர். ரகுநாதன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்: "மே தினத்தை முன்னிட்டு இன்று (01.05.2026 ) காலை சென்னை, தியாகராயர் நகரில், உள்ள இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில தலைமை அலுவலகமான “பாலன் இல்லத்தில்” மே தின விழா மற்றும் கொடியேற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் டி.எம்.



மூர்த்தி தலைமை தாங்கினார். கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மே தினத்தை முன்னிட்டு கட்சியின் செங்கொடியை ஏற்றி வைத்தார்.இதில் மாநில துணைச் செயலாளர் என்.பெரியசாமி முன்னிலை வகித்தார். மாநில செயற்குழு உறுப்பினர்கள் வகிதா நிஜாம், டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திர நாத், தென் சென்னை மாவட்டச் செயலாளர் எஸ்.கே.சிவா உட்பட ஏராளமானோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.” என்று செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நத்தம் - பைக்குகள் நேருக்கு நேர் மோதல்: திருவிழா பார்க்க வந்த இருவர் உட்பட மூவர் உயிரிழப்பு

மதுரை:மே.2-

மதுரை நத்தம் மேம்பாலத்தில் இரண்டு பைக்குகள் நேருக்கு நேர் மோதிய விபத்து காரணமாக சித்திரை திருவிழா பார்க்க வந்த இரண்டு இளைஞர்கள் உட்பட 3 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் பகுதியை சேர்ந்தவர்கள் சல்மான் கான் (21), விஷ்வா(21) விக்னேஷ் (22).இவர்கள் மூவரும் கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் சித்திரை திருவிழாவைப் பார்க்க நத்தத்திலிருந்து ஒரே பைக்கில் நேற்று இரவு மதுரைக்கு வந்தனர். பைக்கை சல்மான் கான் ஓட்டியுள்ளார். நள்ளிரவு 12:30 மணிக்கு நத்தம் மேம்பாலத்தில் அவர்கள் வந்து கொண்டிருந்தனர்.

எதிரே மற்றொரு பைக்கில் மதுரை ஒத்தக்கடையை சேர்ந்த மாதேஷ் (27) என்பவர்



ஒரு வழி பாதையில் சென்றுள்ளர். இவர் ஒரு வழி பாதையில் வருவதை சல்மான் கான் சற்றும் எதிர்பார்க்காவில்லை. இதனால், அவரது பைக், மாதேஷ் பைக் மீது மோதியது. இதில் நான்கு பேரும் தூக்கி வீசப்பட்டு படுகாயம் அடைந்தனர். தகவல் அறிந்த தல்லாகுளம் போக்குவரத்து புலனாய்வு போலீசார் சம்பவ இடத்திற்கு சென்றனர்.

காயம் அடைந்த அவர்களை மீட்டு மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பினர். ஆனாலும், சல்மான் கான் விஷ்வா, மாதேஷ் ஆகியோர் வழியில் பரிதாபமாக உயிரிழந்தனர். படுகாயம் அடைந்த விக்னேஷ் சிகிச்சை பெறுகிறார். சம்பவம் குறித்து தல்லாகுளம் போக்குவரத்து புலனாய்வு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரிக்கின்றனர். சித்திரை திருவிழா பார்க்க வந்த இரண்டு இளைஞர்கள் உட்பட 3 பேர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# திருச்செந்தூருக்கு படையெடுக்கும் அரசியல் கட்சியினர்: 20க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் சுவாமி தரிசனம்

தூத்துக்குடி:மே.2-

தமிழக சட்டப்பேரவை தேர்தல் முடிவுகள் மே 4ம் தேதி வெளியாகவுள்ள நிலையில், திருச்செந்தூர் கோயிலுக்கு அரசியல் கட்சியினர், வேட்பாளர்கள் படையெடுத்து வருகின்றனர்.அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமியின் மனைவி ராதா நேற்று திருச்செந்தூரில் சுவாமி தரிசனம் செய்தார். சட்டப் பேரவை தேர்தல் கடந்த 23ம் தேதி நடைபெற்றது. வாக்கு எண்ணிக்கை மே 4ம் தேதி நடைபெறவுள்ள நிலையில், தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்புகள் நேற்று முன்தினம் மாலை வெளியாகின.தெளிவற்ற கருத்து கணிப்புகள்

இதில் திமுக தலைமையிலான கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெறும் என பெரும்பாலான கருத்துக் கணிப்புகள் தெரிவித்தாலும், அதிமுக கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெற வாய்ப்பு இருப்பதாக



சில கருத்துக் கணிப்புகளும், தவெக அதிகமாக வெல்ல வாய்ப்பு இருப்பதாக ஒன்றிரண்டு கருத்துக் கணிப்புகளும் தெரிவித்துள்ளன. இதனால் தெளிவற்ற நிலை காணப்படுகிறது.இந்நிலையில், அரசியல் கட்சியினர், வேட்பாளர்கள் வழிபாட்டு தலங்களை நோக்கி படையெடுக்கத் தொடங்கியுள்ளனர். குறிப்பாக, திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலை நோக்கி அதிகமானோர் வந்த வண்ணம் உள்ளனர்.முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் 2ம் படை வீடான திருச்செந்தூரில், சூரபத்மனை, சுவாமி ஜெயந்திநாதர் வெற்றி கொண்டார். இதனால் இந்த கோயிலில் வழிபட்டால் எதிரிகள் மற்றும் எதிர் வினைகளை வென்றுவிடலாம் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

இதன்படி அரசியல் கட்சியினரும், வேட்பாளர்களும் திருச்செந்தூர் கோயிலுக்கு வந்த வண்ணம் உள்ளனர். தவெக தலைவர் விஜய், கடந்த 28ம் தேதி திருச்செந்தூர் கோயிலில் வேலுடன் விஸ்வரூப தரிசனத்தில் பங்கேற்று வழிபாடு நடத்தினார்.அதேநாளில் அதிமுகவின் முன்னாள் அமைச்சர்களும், தற்போதைய வேட்பாளர்களுமான ஆர்.பி.உதயகுமார், கே.டி. ராஜேந்திர பாலாஜி, எம்.சி.சம்பத் ஆகியோர் திருச்செந்தூர் கோயிலில் சுவாமி தரிசனம் செய்தனர்.நேற்று முன்தினம் திமுக அமைச்சர்களும், தற்போதையை வேட்பாளர்களுமான பி.கே.சேகர்பாபு, அனிதா ராதாகிருஷ்ணன், ஓட்டப்பிடாரம் தொகுதி திமுக வேட்பாளர் ராமஜெயம் ஆகியோர் தரிசனம் செய்தனர்.இதுபோல திமுக அமைச்சர் அன்பில் மகேஷ் மற்றும் திமுக, அதிமுக உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள், முக்கிய நிர்வாகிகள் சிலர் அடுத்தடுத்து இங்கு தரிசனம் செய்தனர்.இந்நிலையில், அதிமுக பொதுச்செயலாளரும், முன்னாள் முதல்வருமான பழனிசாமியின் மனைவி ராதா நேற்று திருச்செந்தூர் கோயிலில் சுவாமி தரிசனம் செய்தார்.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் கோயிலுக்கு வந்த அவர், விஸ்வரூப தரிசனத்தில் பங்கேற்று மூலவர்சுப்பிரமணிய சுவாமியை வழிபட்டார். முன்னதாக கோயில் நிர்வாகம் சார்பில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

சட்டப்பேரவை தேர்தல் வாக்குப்பதிவு முடிந்த பிறகு இதுவரை 20க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள், கட்சி தலைவர்கள் திருச்செந்தூர் கோயிலில் சுவாமி தரிசனம் செய்துள்ளனர்.வாக்கு எண்ணிக்கைக்கு இன்னும் 3 நாட்கள் உள்ள நிலையில் மேலும் பல தலைவர்கள், வேட்பாளர்கள் திருச்செந்தூர் கோயிலுக்கு வர வாய்ப்பு இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சக்கர வியூகம்
02.05.2026 சனிக்கிழமை

## ஆந்திராவில் 20 ஏக்கரில் நிரந்தர வளாகம்: 7,000 பேருக்கு வேலை கிடைக்கும் என இன்போசிஸ் அறிவிப்பு

அமராவதி: மே.2- தகவல் தொழில்நுட்ப சேவை நிறுவனமான இன்போசிஸ், ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் 20 ஏக்கர் பரப்பளவில் புதிய நிரந்தர வளாகத்தை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இதுகுறித்து அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது: ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் 20 ஏக்கரில் நிரந்தர வளாகம் அமைக்கப்பட உள்ளது. இப்புதிய வளாகத்தில் சுமார் 7,000 ஐடி பணியாளர்கள் பணியாற்றும் வகையில் வசதிகள் செய்யப்படவுள்ளன. கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்தத் துறைமுக நகரில் இன்போசிஸ் நிறுவனத்தின் வளர்ச்சி அபரிமிதமாக உள்ளது.ஆரம்பத்தில் 250 ஊழியர்களுடன் தொடங்




கப்பட்ட இந்த மையம், தற்போது 1,900 ஊழியர்களுடன் இயங்கி வருகிறது. விரைவில் மேலும் 750 பேர் பணியாற்றுவதற்கான இடவசதிகள் தயார் செய்யப்படவுள்ளன.சிறந்த ஐ.டி. மையம்20 ஏக்கரில் அமையவுள்ள நிரந்தர வளாகம் இப்பகுதியின் நீண்டகால வளர்ச்சிக்குச் சான்றாக அமையும். இந்த மையத்திற்காக விசாகப்பட்டினம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து 1,000 புதிய பட்டதாரிகளும், 500 அனுபவம் வாய்ந்த பணியாளர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இது ஆந்திர அரசின் திறன் மேம்பாட்டுத் திட்டங்களுக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதப்படுகிறது. இவ்வாறு இன்போசிஸ் தெரிவித்துள்ளது.ஆந்திர மாநில தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் நாரா லோகேஷ் கூறுகையில், "விசாகப்பட்டினம் ஒரு சிறந்த ஐடி மையமாக உருவெடுத்து வருவது, அங்குள்ள உள்ளூர் திறமையாளர்களின் வலிமையைக் காட்டுகிறது. ஆந்திர மாநிலத்தைத் தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளுக்கான உலகளாவிய மையமாக மாற்றுவதே எங்களது நோக்கம்.இன்போசிஸ் நிறுவனத்தின் இந்த விரிவாக்கம் எங்களது கொள்கை முடிவுகளுக்குக் கிடைத்த அங்கீகாரமாகும். தகவல் தொழில்நுட்பத் துறையில் ஆந்திர மாநிலம் தனது நிலையைத் தொடர்ந்து வலுப்படுத்தி வருகிறது" என்றார்.

## பொதுமக்கள், பயணிகளின் வசதிக்காக சென்னை ரயில்வே கோட்டத்தில் 11 புதிய நடைமேம்பாலங்கள்

சென்னை:மே.2- பொதுமக்கள், பயணிகளின் வசதிக்காக, சென்னை ரயில்வே கோட்டத்தில் கடந்த நிதியாண்டில், 11 புதிய நடைமேம்பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன.இது குறித்து, சென்னை ரயில்வே கோட்டம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: பயணிகள் பாதுகாப்பை வலுப்படுத்துவதிலும், ரயில் நிலைய உள்கட்டமைப்பை மேம்படுத்துவதிலும் ஒரு முக்கிய நடவடிக்கையாக, தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டம், 202526ம் நிதியாண்டில் சென்னை கோட்டத்துக்கு உட்பட்ட ரயில் நிலையங்களில், பயணிகள் தண்டவாளங்களைக் கடக்கும் ஆபத்தான முறையைத் தவிர்க்க புதிய நடைமேம்பாலங்கள் அமைக்கப்படுகின்றன.

அந்த வகையில், கடந்த நிதியாண்டில், 11 புதிய நடைமேம்பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த நடைமேம்பாலங்களில் ஒன்று 'அம்ரித் ரயில் நிலையத் திட்டத்தின்' கீழ் கட்டப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் முக்



கிய சிறப்பம்சமாக, 2026ம் ஆண்டு மார்ச்சில் திருத்தணி ரயில் நிலையத்தின் 12 மீட்டர் அகலமுள்ள பிரம்மாண்டமான நடைமேம்பாலம் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது.அதிக அளவிலான பயணிகளைக் கையாளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த மேம்பாலம், குறிப்பாக, கூட்ட நெரிசல் அதிகமுள்ள நேரங்களிலும், திருவிழாக் காலங்களிலும் பயணிகள் தடையின்றி பாதுகாப்பாகச் செல்ல உதவுகிறது.இதே போல், பயணிகள் நடமாட்டம் அதிகமுள்ள வாலாஜாபாத், திருமால்பூர் மற்றும் அன்வர்திகன்பேட்டை ஆகிய நிலையங்களிலும் புதிய நடைமேம்பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன.சித்தேரி, முகுந்தராயபுரம், பூடி, வேப்பகுண்டா, பொன்பாடி மற்றும் பாலூர் ஆகிய நிலையங்களிலும் புதிய நடைமேம்பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன.இவை முதியவர்கள் மற்றும் சுமை தூக்கிச் செல்லும் பயணிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் தண்டவாளங்களைக் கடக்காமல் பாதுகாப்பாக நடைமேடைகளுக்குச் செல்ல வழிவகை செய்கின்றன.வரும் காலங்களில், மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகள் (Divyangjan-friendly features) உள்ளிட்ட கூடுதல் வசதிகள் மேம்படுத்தப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிரெடிட் கார்டு பயனர்களுக்கு நிம்மதி: நிலுவைத் தொகை செலுத்த 3 நாட்கள் சலுகை

புதுடெல்லி:மே.2- இன்றைய காலகட்டத்தில் கிரெடிட் கார்டுகளின் பயன்பாடு அத்தியாவசியத் தேவையாக மாறியுள்ள நிலையில், அவற்றுக்கான நிலுவைத் தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்துவதில் பலரும் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். இத்தகைய பயனர்களுக்கு உதவும் வகையில், ரிசர்வ் வங்கி விதிகளில் முக்கிய மாற்றங்களை மேற்கொண்டுள்ளது.அதன்படி, கூடுதல் அவகாசம் மற்றும் குறைந்த கட்டணம் ஆகிய சலுகைகள் கிரெடிட் கார்டு வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட உள்ளன. ரிசர்வ் வங்கி




யின் புதிய விதிமுறைகளின்படி, நிர்ணயிக்கப்பட்ட கடைசி தேதிக்கு பிறகு, அபராதக் கட்டணம் உடனடியாக விதிக்கப்படாது. கிரெடிட் கார்டுக்கான பணம் செலுத்த வாடிக்கையாளர்களுக்கு பில்லில் குறிப்பிடப்பட்ட தேதியைக் காட்டிலும் கூடுதலாக மூன்று நாட்கள் அவகாசம் வழங்கப்படும்.

உதாரணமாக, ஒருவரது நிலுவைத் தொகையைச் செலுத்த வேண்டிய கடைசித் தேதி மே 5 என்றால், அவர் எவ்வித அபராதமும் இன்றி மே 8ம் தேதி வரை கிரெடிட் கார்டு பில்லை செலுத்தலாம். மற்றொரு முக்கிய மாற்றமாக, தாமதக் கட்டணம் இனி முழுத் தொகைக்கும் விதிக்கப்படாது. மாறாக, செலுத்தப்பட வேண்டிய மீதமுள்ள நிலுவைத் தொகைக்கு மட்டுமே அது கணக்கிடப்படும்.முன்று நாள் காலக்கெடுவுக்குப் பிறகும் பணம் செலுத்தத் தவறினால், அது நிலுவையாகக் கருதப்படும் ஒருவரின் கிரெடிட் ஸ்கோர் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. இந்த விதி முறைகள் அடுத்த ஆண்டு ஏப்ரல் 1ம் தேதி முதல் அமலுக்கு வர உள்ளன.

## நேபாளத்தில் வேன் விபத்து: 20 பேர் உயிரிழப்பு

காத்மாண்டு:மே.2- நேபாளத்தின் ரோல்பா பகுதியில் 800 மீட்டர் ஆழ பள்ளத்தில் வேன் கவிழ்ந்து நேற்று ஏற்பட்ட விபத்தில் 20 பக்தர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.நேபாளத்தின் இமயமலையில் சுமார் 4,580 மீட்டர் உயரத்தில் ரோல்பா நகர் அமைந்துள்ளது. அங்குள்ள புகழ்பெற்ற இந்து கோயிலில் வழிபடுவதற்காக ருகம்கோட் பகுதியில் இருந்து சுமார் 20 பக்தர்கள் ஒரு வேனில் சென்று



கொண்டிருந்தனர். அவர்களின் வேன், தவாங் பகுதியில் சென்றபோது கட்டுப்பாட்டை இழந்து 800 மீட்டர் ஆழ பள்ளத்தில் கவிழ்ந்தது. இதில் 20 பேர் உயிரிழந்தனர்.இதுகுறித்து உள்ளூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் சுனில் தபா கூறும்போது, "முதல்கட்ட விசாரணையில் சிறிய வேனில் அதிக எண்ணிக்கையிலான பக்தர்கள் பயணம் செய்தது தெரியவந்துள்ளது. கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக சாலையோர பள்ளத்தில் வேன் கவிழ்ந்திருக்கிறது. உள்ளூர் மக்களின் உதவியுடன் மீட்புப் பணி நடைபெற்று வருகிறது. உயிரிழந்தவர்களின் விவரங்கள் உடனடியாக தெரியவில்லை" என்றார்.

## ரயில்வே துறையில் ஆள்குறைப்பு அறிவிப்பை அரசு உடனே திரும்பப்பெற வேண்டும்: சிபிஎம்

விருதுநகர்:மே.2- ரயில்வே துறையில் ஆள் குறைப்பு அறிவிப்பை மத்திய அரசு உடனே திரும்பப்பெற வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் சண்முகம் தெரிவித்துள்ளார்.மே தினத்தை முன்னிட்டு விருதுநகரில் உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் மே தின கொடியேற்றும் நிகழ்ச்சி இன்று காலை நடைபெற்றது. கட்சியின் மாநிலச் செயலாளர் சண்முகம் கலந்துகொண்டு கொடியேற்றி கட்சியினருடன் உறுதிமொழி ஏற்றார். அப்போது அவர் அளித்த பேட்டியில், "மே தின தியாகிகளுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வீர வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன். உலகம் முழுவதும் சாதி, மதம், இனம், மொழி கடந்து தொழிலாளர்களின் உரிமை தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரன் மீது தொடுத்த யுத்தம் காரணமாக எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எரிவாயு விலை உயர்ந்துள்ளது. வணிக சிலிண்டர் விலை ரூ.3,250 வரை உயர்ந்துள்ளதால்



ஓட்டல் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. பல தொழிலாளர்கள் வேலை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. வீட்டு உபயோகத்திற்கான சிலிண்டர் தட்டுப்பாடும் ஏற்படும்.நிச்சயம் பெட்ரோல் பொருள்கள் விலையை மத்திய அரசு, அடுத்த ஒரு சில நாள்களில் கடுமையாக உயர்த்த உள்ளது. 5 மாநில சட்டப் பேரவைத் தேர்தல் காரணமாகவே இதுவரை விலை உயர்த்தப்படாமல் இருந்தது. ஏற்கனவே கச்சா எண்ணெய் விலை குறைவாக இருந்தபோது மத்திய அரசு பெட்ரோலிய பொருள்களின் விலையை குறைக்கவில்லை. தொழிலதிபர்களான நண்பர்களின் லாபத்திற்காக குறைக்கவில்லை. தற்போது சர்வதேச அளவில் நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், சுமைகள் அனைத்தையும் மக்கள் தலையில் சுமத்துவதைத்தான் மத்திய அரசு கடைபிடிக்கிறது.

தேர்தல் முடிந்தவுடன் ரயில்வேயில் சுமார் 30 ஆயிரம் பணியிடங்களை ஒழிப்பது என்ற முடிவை மத்திய அரசு அறிவித்துள்ளது. இது வன்மையான கண்டனத்திற்கு உரியது. வேலையை எதிர்பார்த்து இருக்கும் இளைஞர்களின் கனவில் மண்ணை அள்ளிப்போட்டுள்ளது. உடனடியாக இந்த அறிவிப்பை திரும்பப்பெற வேண்டும்.ரயில்வே விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நேரத்தில் பணியாளர்கள் எண்ணிக்கையை குறைப்பது கண்டனத்திற்கு உரியது. பயணிகள் பாதுகாப்பு பற்றி கவலைப்படாமல் அரசு செயல்படுகிறது என்பதற்கான எடுத்துக்காட்டு பொதுத்துறை நிறுவனங்களில் இதுபோன்ற நடவடிக்கைகளால் இட ஒதுக்கீடு என்பது இல்லாமல் போகும்.

உழைப்புச் சுரண்டல் என்பது எல்லையில்லாமல் உள்ளது. 8 மணி நேரம் என்பது 10 12 மணி நேரம் 16 மணி நேரம் என்று பல துறைகளில் தொழிலாளர்கள் வேலை வாங்கப்படுகிறார்கள். 8 மணி நேரம் வேலை என்பதை உறுதிப்படுத்த மத்திய அரசும் மாநில அரசும் முன்வர வேண்டும்.

தற்போது வெளியாகி உள்ள கருத்துக் கணிப்பு என்பது கருத்து திணிப்பு. நிச்சயம் மக்கள் தீர்ப்புதான் ஏற்கக் கூடியது. விஜய் ஆட்சி அமைப்பார் என்று கருத்துக்கணிப்பு வந்துள்ளது. தமிழ்நாட்டில் இதை யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவர்கள்கூட ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். திமுக தலைமையிலான கூட்டணி ஆட்சி அமைக்கும். திமுக ஆட்சி மீண்டும் மலரும்.

பட்டாசு ஆலை வெடிவிபத்தில் 25 பேர் ஒரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளது பெரும் துயரம். விதிமுறைகள் கடைபிடிக்கப்படுவதில்லை என்று மீண்டும் மீண்டும் பிரச்சினையாக வருகிறது. ஆலைகளை ஆய்வு செய்யும் அதிகாரிகள் சட்டத்திற்கு உட்பட்டு விதிமுறைகளின்படி நடைபெறுகிறதா, தொழிலாளர்களுக்கு பாதுகாப்பாக இருக்கிறதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும்.

உயிரிழப்புகள் இல்லாத வகையில் தொழிலை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் யோசிக்க வேண்டும். தொழிலாளர்கள் உயிர் பாதுகாப்புக்கு அந்தந்த நிறுவனங்கள்தான் பொறுப்பேற்க வேண்டும். காலனி, சேரி போன்ற பெயர்களில் உள்ளதை மாற்றுவதற்கு திமுக அரசு அரசாணை பிறப்பித்துள்ளது. நாங்களும் அதை வரவேற்றுள்ளோம். ஆனால், விருதுநகர் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே சாதியின் பெயரில் நேரடியாகக் குறிப்பிடக் கூடிய வகையில் உள்ளது. இது அதிர்ச்சியளிக்கிறது. உடனடியாக மாவட்ட நிர்வாகம் அரசு ஆவணங்களில் பெயரை மாற்றுவதற்கும், அந்த ஊர் மக்களிடம் கலந்துபேசி வேறொரு பெயரை வைப்பதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கூறினார்.

## கரூர் அருகே காருக்குள் மூச்சுத்திணறி சிறுவன் உயிரிழப்பு

கரூர்:மே.2- வீட்டருகே உறைபோட்டு முடியிருந்த காரினுள் ஏறி விளையாடிய சிறுவன், கதவு பூட்டிக் கொண்டதால் மூச்சுத் திணறி உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கரூர் மாவட்டம் குளித்தலை அருகேயுள்ள கழுகூரை சேர்ந்தவர் வேலு (36). மனைவி மாரிஸ்வரி (30). மகன் சஞ்சீவி (4). வேலு மாரிஸ்வரி தம்பதியினர் கொத்தனார், சித்தாளாக உள்ளனர். இவர்களின் மகன் சஞ்சீவி நேற்று அப்பகுதியை சேர்ந்த சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது வீட்டருகே உறைபோட்டு (கார் கவர்) மூடி நிறுத்தப்பட்டிருந்த காரினுள் ஏறி விளையாடியுள்ளார். அப்போது எதிர்பாராத விதமாக கதவு பூட்டிக்கொண்டதால் திறக்க முடியாமல் சிறுவன் சஞ்சீவி வெளியேற முடியமல்





சிக்கிகொண்டார். விளையாட சென்ற மகனை காணவில்லை என பதறிய பெற்றோர், உறவினர்கள் நீண்ட நேரமாகியும் கண்டு பிடிக்க முடியாமல் தவித்துள்ளனர். சந்தேகத்தின் பேரில் வீட்டருகே நின்ற காரின் உறையை அகற்றி விட்டு கண்ணாடி வழியாக காரினுள் பார்த்தபோது சிறுவன் சஞ்சீவி காரினுள் மயங்கிய நிலையில் கிடந்துள்ளார்.உடனடியாக கார் கதவை திறந்த பெற்றோர் சிறுவனை மீட்டு குளித்தலை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு சிறுவனை பரிசோதித்த மருத்துவர்கள் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து தோகை மலை போலீஸார் வழக்குப் பதிவு செய்து சிறுவன் உடலை கைப்பற்றி அதே மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி விசாரணை நடத்தி வருகின்றனர். மருத்துவமனையில் இருந்த சிறுவனின் பெற்றோர், உறவினர்கள், திரண்டிருந்த கிராமத்தினர் கதறி அழுதது சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



## சென்னை மெட்ரோ ரயில்கள் ஞாயிறு அட்டவணைப்படி இயக்கம்


சென்னை::மே.2- உழைப்பாளர் தினத்தை ஒட்டி, மெட்ரோ ரயில்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை அட்டவணைப்படி இயக்கப்படும் என்று சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.உழைப்பாளர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இதை ஒட்டி, இன்று (1ம் தேதி) அரசு விடுமுறை தினம் என்பதால், மெட்ரோ ரயில்களில் பயணம் செய்வோரின் எண்ணிக்கை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.7, 10, 15 நிமிட இடைவெளி

எனவே இன்று ஞாயிற்றுக்கிழமை அட்டவணைப்படி மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும் என்று மெட்ரோ ரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.இதுகுறித்து, அந்நிறுவனம் வெளியிட்ட பதிவு: சர்வதேச உழைப்பாளர் தினத்தை ஒட்டி, ஞாயிற்றுக்கிழமை கால அட்டவணைப்படி, இன்று மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும்.காலை 5 மணி முதல் இரவு 11 மணி வரை மெட்ரோ ரயில் சேவை இயக்கப்படும். காலை 5 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும், இரவு 8 மணி முதல் இரவு 10 மணி வரையும் 10 நிமிட இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும்.நண்பகல் 12 மணி முதல் இரவு 8 மணி வரை 7 நிமிட இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும். இரவு 10 மணி முதல் 11 மணிவரை 15 நிமிட இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும் இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நுழைவு கட்டண விவகாரம் - கொடைக்கானலில் வனத்துறையை கண்டித்து வாகன ஓட்டுநர்கள் போராட்டம்

கொடைக்கானல்: மே.2- கொடைக்கானலில் வனத்துறை சுற்றுலா இடங்களுக்கு ஒரே இடத்தில் நுழைவு கட்டணம் வசூலிக்கும் வனத்துறையை கண்டித்து, இன்று (மே 1) காலை முதல் சுற்றுலா வாகன ஓட்டுநர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் உள்ள அனைத்து வனத்துறை சுற்றுலா இடங்களுக்கும் கடந்த ஜனவரி 12ம் தேதி முதல் ஒரே இடத்தில் 'க்யூ ஆர் கோடு' மூலம் நுழைவு கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்த நடைமுறையால் விடுமுறை நாட்களில் பசுமை பள்ளத்தாக்கு பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதனால் சுற்றுலா பயணிகள்



மற்றும் உள்ளூர் மக்கள் பாதிக்கின்றனர்.எனவே, பழைய முறைப்படி அனைத்து வனத்துறை சுற்றுலா இடங்களுக்கும் அந்தந்த இடத்திலேயே தனித்தனியாக நுழைவு கட்டணம் வசூலிக்க வேண்டும் என வலியுறுத்தி, ஏப்ரல் 19ம் தேதி கொடைக்கானலில் அனைத்து சுற்றுலா வாகன ஓட்டுநர்கள், உரிமையாளர்கள் வாகனங்களை இயக்காமல் பேருந்து நிலையத்தில் காலவரையற்ற வேலை நிறுத்தம் மற்றும் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.அப்போது, அவர்களுடன் அதிகாரிகள் பேச்சு வார்த்தை நடத்தியதில், 5 நாட்களுக்குள் வனத்துறை சுற்றுலா இடங்களில் தனித்தனியாக நுழைவு கட்டணம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என முடிவெடுக்கப்பட்டது. இதையடுத்து, வாகன ஓட்டுநர்கள் போராட்டத்தை கைவிட்டனர். தற்போது கோடை சீசனை முன்னிட்டு சுற்றுலா பயணிகள் படையெடுத்து வருகின்றனர்.அதனால் கொடைக்கானல் நகர் மற்றும் அனைத்து சுற்றுலா இடங்களிலும் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

இதற்கிடையே, அனைத்து வனத்துறை சுற்றுலா இடங்களுக்கும் பசுமை பள்ளத்தாக்கு பகுதியில் நுழைவு கட்டணம் வசூலிக்கும் முறை தொடர்வதால் அப்பகுதியை சுற்றுலா வாகனங்கள் கடந்து செல்ல குறைந்தது 30 நிமிடங்கள் முதல் ஒரு மணி நேரமாகிறது. அதனால் மலைச்சாலையில் வாகனங்கள் பல கி.மீ., தூரத்துக்கு அணிவகுத்து நிற்கும் நிலை ஏற்படுகிறது.

இதனால் சுற்றுலா பயணிகள் மட்டுமின்றி அன்றாட பணிகளுக்கு செல்லும் உள்ளூர் மக்களும் பெரிதும் பாதிக்கின்றனர். இந்நிலையில் வெள்ளிக்கிழமை (இன்று) காலை முதல் வனத்துறை நுழைவு கட்டணம் வசூலித்து வரும் பசுமை பள்ளத்தாக்கு பகுதியில் சுற்றுலா வாகன ஓட்டுநர்கள் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சாலையின் குறுக்கே சுற்றுலா வாகனங்களை நிறுத்தி வைத்துள்ளனர். இதனால் அந்த வழியாக வாகனங்களில் சுற்றுலா பயணிகள் செல்ல முடியாமல் தவித்து வருகின்றனர். பலர் வாகனங்களிலேயே காத்திருக்கின்றனர். ஒரே இடத்தில் நுழைவு கட்டணம் வசூலிக்கும் திட்டத்தை கைவிடக்கோரியும், வனத்துறையா? வசூல் துறையா? என சுற்றுலா வாகன ஓட்டுநர்கள் கோஷமிட்டு வருகின்றனர்.



■ தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., 5 சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ளதை முன்னிட்டு, தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் காவல்துறையினர் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனை வழங்கினார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.மயில்வாகனன், இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன் ஆகியோர் உள்ளனர்.




## திருப்பூர் மாவட்டம், உடுமலை நகரில் இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மே தின விழா

திருப்பூர்மே 02- திருப்பூர் மாவட்டம், உடுமலை நகரில் இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மே தின விழா எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது. உடுமலை நகரில் உள்ள கட்சி அலுவலகம் முன்பு நடைபெற்ற கொடியேற்றும் நிகழ்ச்சிக்கு, திருப்பூர் மாவட்டச் செயலாளர் மூர்த்தி மற்றும் மாவட்டத் தலைவர் நாராயணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில் நகரச் செயலாளர் சாகுல் அமீர் வரவேற்புரை யாற்ற, அப்பாஸ் சிறப்புரை யாற்றினார். தொடர்ந்து, தலைகொண்டம்மன் கோயில் அருகில் உள்ள இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகம் முன்பும் கட்சி கொடியேற்றப்பட்டது. நிகழ்வின் நிறைவாக, அங்கு திரண்டிருந்த பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கிக் கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் கட்சி நிர்வாகிகள் தங்கமணி, செல்வம், ரமேஷ் மற்றும் ஒன்றியச் செயலாளர் முருகன் உள்ளிட்ட பல முக்கியப் பிரமுகர்கள் மற்றும் கட்சித் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.




## தையல் கலைஞர்களின் உரிமை முழக்கம்! திசையன்விளையில் 24வது ஆண்டு விழா மற்றும் மே தினக் கொண்டாட்டம்

திசையன்விளை மே 02- திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளையில், தமிழ்நாடு தையல் கலை தொழிலாளர்கள் முன்னேற்ற சங்கம் சார்பில் 24வது ஆண்டு விழா மற்றும் மே தின விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.இந்த இரட்டை விழாவினை முன்னிட்டு, தொழிலாளர்களின் உரிமைகளை வலியுறுத்தி பிரம்மாண்ட ஊர்வலம் நடைபெற்றது. இந்த ஊர்வலத்தைத் தையல் கலை தொழிலாளர்கள் முன்னேற்ற சங்கத்தின் மாநிலத் தலைவர் கரூர் பாலன் கொடியேற்றி முறைப்படி துவக்கி வைத்தார்.இந்நிகழ்வில் திசையன்விளை வட்டாரத் தலைவர் ஆதிலிங்கம், செயலாளர் ஜெபக்குமார், பொருளாளர் விஜய ராஜன் மற்றும் துணைச் செயலாளர் ஜெபஸ்டின் செல்வகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திசையன்விளை வட்டாரத்தைச் சேர்ந்த அனைத்து தையல் கலைஞர்களும் பெருந்திரளாகக் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.




## விழுப்புரத்தில் அரசு அலுவலர் ஒன்றியம் சார்பில் மே தின விழா

விழுப்புரம் மே 02- விழுப்புரம் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் சார்பாக மே தின விழா எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது. தலைவர் சிவ.இளங்கோ இல்லத்தில் நடைபெற்ற இந்த விழாவிற்கு, மாவட்டத் தலைவர் நாகராஜன் தலைமை தாங்கினார். தொழிலாளர்களின் உரிமைகளையும், அரசு அலுவலர்களின் ஒற்றுமையையும் போற்றும் வகையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மாவட்டச் செயலாளர் பீம்ராஜ் மற்றும் மாவட்டப் பொருளாளர் இரா. தணிகைவேலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவின் சிறப்பம்சமாகத் தொழிலாளர் வர்க்கத்தின் தியாகங்கள் குறித்து நினைவு கூரப்பட்டது.இந்நிகழ்வில் துணைத் தலைவர்கள் ஜனார்த்தனன், வெங்கட்ராமன், செஞ்சி வட்டக்கிளைத் தலைவர் ஸ்ரீதர், இளைஞரணிச் செயலாளர் முரளி மற்றும் ராமலிங்கம் உட்பட மாவட்ட நிர்வாகிகள் பலரும் திரளாகக் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.

## ரூ.75 கோடியில் புதிய வசதிகள் ரூ.2 கோடி ஆராய்ச்சி நிதி பிரம்மாண்டமாக நடைபெற்ற செங்குந்தர் கல்லூரியின் 30வது ஆண்டு விழா




பெருந்துறை மே 02 ஈரோடு செங்குந்தர் பொறியியல் கல்லூரியின் 30வது ஆண்டு விழா கல்லூரி வளாகத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் கல்லூரி முதல்வர் முனைவர் வி. வெங்கடாச்சலம் வரவேற்றார். அப்போது பேசிய அவர், கடந்த சில ஆண்டுகளில் மட்டும் மாணவர்களுக்காக ரூ.75 கோடி மதிப்பிலான புதிய கட்டிடங்கள் மற்றும் ஆய்வகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், பேராசிரியர்கள் ரூ.2 கோடி ஆராய்ச்சி நிதியுதவி பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டார்.கல்லூரி தாளாளர் ஜி. கமலமுருகன் தனது தலைமையுரையில், "மாணவர்கள் யாரோ ஒருவரைத் தலைவனாக ஏற்று அவர் பின் செல்லாமல், நீங்களே தலைவனாக உருவாக வேண்டும்" என ஊக்கப்படுத்தினார். செயலாளர் எஸ். என். தங்கராஜு தனது வாழ்த்துரையில், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பையும் மாணவர்களின் உழைப்பையும் இந்த விழா கொண்டாடுகிறது என்றார். விழாவின் சிறப்பம்சமாக, பிரபல விஜய் தொலைக்காட்சி புகழ் கோபிநாத் சந்திரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறந்த மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார். அவர் பேசுகையில், "2030ஆம் ஆண்டுக்குள் செயற்கை நுண்ணறிவின் வரவால் கணினி பொறியியல் துறையில் 40 சதவீத வேலைவாய்ப்புகள் இழக்க நேரிடும். நெருக்கடியான நிலை மட்டுமே நம்மை அடுத்த நிலைக்குக் கொண்டு செல்லும்" என எச்சரித்து அறிவுரை வழங்கினார்.இந்நிகழ்வில் கல்லூரியின் தலைவர் வி. அண்ணாதுரை, பொருளாளர் எஸ். செந்தில்குமார், துணைத் தலைவர்கள் பி. சி. பாலுசாமி, ஏ. பி. வி. சுவாமிநாதன், இணைச் செயலாளர்கள் வி. தர்மலிங்கம் மற்றும் முனைவர் எஸ். பூரணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஈரோடு செங்குந்தர் கல்வி அறக்கட்டளை உறுப்பினர்கள் மற்றும் மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகளுடன் விழா இனிதே நிறைவுற்றது.



## மீரா விஜய் ஆண்டனி பவுண்டேஷன் - நற்பணி மன்றம் அசத்தல்: சேலத்தில் 3ம் ஆண்டு இரத்த தான முகாம்

சேலம் மே 02- உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு, சேலத்தில் உயிர்மூச்சாய் விளங்கும் இரத்த தான முகாம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. மீரா விஜய் ஆண்டனி பவுண்டேஷன் மற்றும் சேலம் மாவட்ட தலைமை விஜய் ஆண்டனி நற்பணி மன்றம் இணைந்து, சேலம் அரசு மருத்துவமனையுடன் கூட்டு சேர்ந்து இந்த அறப்பணியை மூன்றாம் ஆண்டாக முன்னெடுத்தனர்.சேலம் கோட்டை அண்ணாநகர் பகுதியில் நடைபெற்ற இந்த முகாமிற்கு கார்த்திக் தலைமை வகித்தார். விஜயன் மற்றும் தனுஷ் ஆகியோர் வரவேற்புரை வழங்க, சரவணன் முன்னிலை வகித்தார். முகாமை மருத்துவர் இரவிந்திரன் முறைப்படி துவக்கி வைத்தார்.இந்த நிகழ்வில் வழக்கறிஞர் சங்கர்கணேஷ், பர்னபாஸ், சையது இப்ராஹிம், சையத் மூசா, கோகுல கண்ணன், மோகன், சதாம் உசேன் மற்றும் முகமது பிலால் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்று சிறப்பித்தனர். ஊர் முக்கியஸ்தர்களாக மாரியப்பன் மற்றும் குமார் கலந்துகொண்டனர். மாவட்ட தலைமை சார்பில் மணி, அலாவுதின், அர்ஜுன் ஆகியோரும், மாநகர பொறுப்பாளர்களாக அறிவுமணி, ஆறுமுகம், குமார் ஆகியோரும் ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொண்டனர். 100க்கும் மேற்பட்ட சமூகப் பொறுப்பாளர்களும் இளைஞர்களும் ஆர்வமுடன் இரத்த தானம் செய்தனர். விழாவின் நிறைவில் கார்த்திக் நன்றியுரை வழங்கினார்.



## திருமுருகன்பூண்டி, அம்மாபாளையத்தில் பறந்த செங்கொடி

### தொழிலாளர் தினத்தில் கம்யூனிஸ்ட் தோழர்களின் எழுச்சி

திருப்பூர் மே 2- உழைப்பாளர் தினமான (மே 1), திருப்பூர் மாவட்டம் திருமுருகன்பூண்டி, அம்மாபாளையம், ராக்கியாபாளையம், தேவராயன்பாளையம் கிளைஇந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) சார்பில் மே தின விழா மிக உற்சாகமாகக் கொண்டாடப்பட்டது. தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் போராடி உயிர்நீத்த தியாகிகளை நினைவு கூரும் வகையில், கட்சியின் செங்கொடி ஏற்றி வைக்கப்பட்டு வீர வணக்கம் செலுத்தப் பட்டது."தொழிலாளர் ஒற்றுமை ஓங்குக" மற்றும் "உழைப்பாளர் வர்க்கம் வெல்லட்டும்" போன்ற முழக்கங்களுடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் திரளாகக் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர். உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், தொழிலாளர் நலனுக்காகத் தொடர்ந்து களம் காணவும் இத்தருணத்தில் உறுதி ஏற்கப்பட்டது.இந்நிகழ்வில், ஒன்றிய குழு எஸ். வெங்கடாசலம், ஆர். பாலசுப்பிரமணியம் முன்னாள் ஒன்றிய குழு எஸ்.காமராஜ், திருமுருகன்பூண்டி நகராட்சி கவுன்சிலர் பி.சுப்பிரமணியம், எஸ். ராஜ், கிளைச் செயலாளர்கள் சுனில் தாஸ் ராஜேந்திரன், ராஜன், ஞிசீதிமி ஒன்றிய தலைவர் சந்தோஷ் குமார் மற்றும் தோழர்கள் ஆர். மணி, ஈஸ்வரன், ஆறுமுகம், தேவராஜ், ஆர். ஈஸ்வரன், லோகநாதன், ராஜாமணி, ஆர். முருகேசன், ஆர். நாகராஜ், கே. குமாரசாமி, ஆறுமுகம், அவிநாசியப்பன், செல்வராஜ், தயாநிதி, இளநீர் கடைக்காரர், வேலுச்சாமி, தண்டபாணி, வி.கே. தங்கவேல், ஸ்ரீராம் சிண்டிகேட் செல்வராஜ், சிவக ாமி, பழனியம்மாள், பூக்காரம்மாள், அபு, எ.சங்கர், நாகராஜ் மற்றும் பொதுமக்கள் கொடியேற்று விழா நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பு செய்தனர்.



■ நீர்காத்த ஸ்ரீ அய்யனார் அப்பன் உடனமர் ஸ்ரீ பூர்ணாதேவி ஸ்ரீ புஷ்கலாதேவி திருக்கல்யாண உற்சவ திருவிழா சித்ரா பௌர்ணமி முன்னிட்டு, திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் அருள் மொழி வீதியில் எழுந்தருளியுள்ள அய்யனார் அப்பன் உடனமர் பூர்ணா தேவி புஷ்கலா தேவி திருக்கல்யாண உற்சவாம் திருக்கோயில் நிர்வாகிகள் பொதுமக்கள் முன்னிலையில் நடைபெற்றது. பிரசன்ன விநாயகர் கோயில் அறக்காவலர் குழு தலைவர் கணேஷ் மூர்த்தி, திருக்கல்யாணத்திற்கு மாங்கல்ய உபயதாரர், கௌரி செந்தில்குமரன் பக்தர்களுக்கு பிரசாதம் மற்றும் அன்னாதனம் வழங்கினர்.



■ சேலம் இளந்தளிர் சமூக சேவை நண்பர்கள் குழு சார்பாக செவ்வாய் பேட்டை பகுதியில் வழக்கறிஞர் சுதன் தலைமையில், மே தினம் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது அதன் சமயம் தொழிலாளர்கள் கௌரவ படுத்தப்பட்டு பொன்னாடை போற்றி அவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000